www.Padasalai.Net www.TrbTnpsc.com

**11**

Reg. No. [ ] [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

# அரையாண்டுத் தேர்வு - 2023

## தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

### பகுதி - 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 14 x 1 = 14

1. பாயிரம் இல்லது .............. அன்றே. அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. பொருத்தமான இலக்கிய வடிவம் எது? அ) ஏதிலிக் குருவிகள் - மரபுக் கவிதை ஆ) திருமலை முருகன் பள்ளு – சிறுகதை இ) யானைடாக்டர் - குறும்புதினம் ஈ) ஐங்குறுநூறு – புதுக்கவிதை
3. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர். அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார். இ) முருகன் ஈ) பாரதியார்
4. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
5. "ஜனப்பிரளயம்" என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் எது? அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
6. பெண்கள் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று அ) சிற்றில் ஆ)சாழல் இ)சிறுதேர் ஈ) சிறுபறை
7. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ................ நினை அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை இ) மறதியால் கெட்டவரை ஈ) சொல்லேர் உழவரை
8. தமிழின் முதல் பா வடிவ நாடக நூல் அ) இரகசிய வழி ஆ) மனோன்மணீயம் இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு.
9. அப்துல் இரகுமானின் சாகித்திய அகாதமி விருது பெற்ற நூல் எது? அ) சுட்டு விரல் ஆ) பால்வீதி இ) ஆலாபனை ஈ) நேயர் விருப்பம்.
10. நேரொன்றிய ஆசிரியத்தளை எனப்படுவது அ) காய் முன்நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மாமுன் நேர்.
11. நிழல் போலத் தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை? அ) வினை ஆ) பயன் இ) வடிவம் ஈ) உரு
12. பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை? அ) பகுதி, இடைநிலை சந்தி, பாரியை விகாரம், ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி. விகுதி
13. "மாநகர்" என்ற சொல்லின் இலக்கணக் குறிப்பு அ) வினைத்தொகை ஆ) பண்புத் தொகை இ) உரிச்சொல் தொடர் ஈ) பெயரெச்சம்
14. பொருத்தி விடையைத் தேர்க

| | | |
|---|---|---|
| அ) விரியன் | – | 1) தண்டை |
| ஆ) திருகு முருகு | – | 2) காலாழி |
| இ) நாங்கூழ்ப் புழு | – | 3) சிலம்பு |
| ஈ) குண்டலப் பூச்சி | – | 4) பாடகம் |

அ) 3,4,2,1 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 இ) 4, 3, 2, 1 ஈ) 4, 1, 3,2

### பகுதி – 2 பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடைதருக** 3 x 2 = 6

15. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?
16. மதீனா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.
17. " ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள?" இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?
18. காவடிச் சிந்து என்பது யாது?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி** 2 x 2 = 4

19. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.
20. தமிழ் நாட்டின் மாநிலமரம் - சிறு குறிப்பு வரைக.
21. சங்க காலத்தில் தமிழ்மொழியின் நிலைபற்றி இராச மாணிகனாரின் கூற்று யாது?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடையளி** 7 x 2 = 14

22. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக. அ) கற்பிளந்து (அல்லது) அரும்பொருள்
23. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக அ) துஞ்சல் (அல்லது) ஆ) மலிந்த
24. தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக. கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்து வாழ்ந்து நாடு வந்தனர்.
25. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக அ) வலி, வளி, வழி (அல்லது) குரை, குறை
26. காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக?
27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. முயற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமல் போவாது.
28. கலைச் சொல் தருக அ) Myth ஆ) Weaver Bird
29. உவமை எவற்றின் அடிப்படையில் தோன்றும்?
30. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க. கால்நடை

### பகுதி – 3 பிரிவு 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்** 2 x 4 = 8

31. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?
32. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை?
33. மேகத்திடம் கூறுவது போல் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?
34. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாக குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்** **2 x 4 = 8**

35. தாமஸிகம் என்றால் என்ன?
36. ஜீவாவின் பேச்சு நடை குறித்து சுந்தரராமசாமி **கூறுவன** யாவை?
37. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது – என்பதை எடுத்துக் காட்டுடன் விளக்குக.
38. மதிப்புக் கூட்டுப் பொருள் என்றால் என்ன?

பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடையளிக்கவும்** **3 x 4 = 12**

39. அ) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல் - சொற்பொருள் பின்வருநிலையணியை விளக்கி இக்குறளுக்கு இவ்வணியை பொருத்தி எழுதுக. (அல்லது) ஆ) பிறிது மொழிதல் அணியை தகுந்த உதாரணத்துடன் விளக்குக.
40. இலக்கிய நயம் பாராட்டுக.


சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதமதரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லா சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்து நின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்.
- நாமக்கல் கவிஞர்.

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.
" ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" அல்லது " சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்"
42. தமிழாக்கம் தருக
1) Nobody can hurt me without my permission
2) Culture does not make people, people make culture.
3) Roads were made for journeys not destinations.
4) Winners don't do different things, they do things differently.
42. **காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்**
தமிழ் என்ற சொல் தமிழர்க்கு இனிமையானதும் " இனிமையும் நீர்மையும் தமிழெனல்" ஆகும். என்று பிங்கலநிகண்டு குறிப்பிடுகிறது. தமிழ் என் சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்ற பொருள்களிலும் வழங்கியுள்ளனர். "அதாஉடம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை"என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. கம்பன் " தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து 'தமிழ்" என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன. தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் " தமிழ்" பாட்டு என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. முப்பது பாட்டுக்களான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்,

**வினாக்கள்**

அ) தமிழ் என்ற சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
ஆ) பத்தியில் இடம் பெற்ற அளபெடைகள் கண்டறிக
இ) திருப்பாவைக்கு அண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?
ஈ) தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுபவைகளை ஒரு வரியில் எழுதுக.

43. படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுக.




பகுதி - 4

**இரு பக்கங்களுக்கு விடையளிக்கவும்** **3 x 6 = 18**

44. பாரதிதாசன் ஒரு "புரட்சிக்கவி" என்பதை உதாரன் அ) பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க. **(அல்லது)**
ஆ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.
45. அ) பௌத்தக் கல்வி, சமணக்கல்வி, மரபு வழிக் கல்வி முறைகளால் தமிழகக் கல்வி முறையில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களை விவரிக்க. **(அல்லது)**
'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சைப்பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.
46. நர்த்தகி நடராஜனின் நேர்காணல் வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க. **(அல்லது)**
வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக.

பகுதி – 5

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **4 + 2 = 6**

அ) "அம்ம வாழி" எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை எழுதுக.
ஆ) "பகை " என முடியும் குறட்பாவை எழுதுக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com